

கடவுள் துகள்!



சுவாமி பிரபஞ்சநாதன்

கடவுள் துகள்



சுவாமி பிரபஞ்சநாதன்

கடவுள் துகள்!

இன்று உலகம் தேடிகொண்டிருக்கும் ஆய்வாளர்கள் சொல்லாத ஒரு அறிய உண்மையை நம்முடைய மகான் திருமூலர் அன்றே கூறிவிட்டார்.



இவர் இங்கு குறிப்பிடுவது சீவனுடைய வடிவை சொல்லவேண்டும் என்றால், ஒரு பசுவின் முடியை (மயிரை) எடுத்து அதை நூறாக கூறிட்டு, பின்பு அதில் ஒன்றை எடுத்து ஆயிரமாகப் பிரித்து, அதன்பிறகு அதில் ஒன்றை நான்காயிரமாக பிரித்தால் அதில் வருகின்ற கண்களுக்குப்

புலப்படாத அணுவே அந்த சீவனின் வடிவம் என்கின்றார். அதுவே, “**சிவம்**” என்றும் கூறுகிறார்.

இதை நாம் ஆராய்வோம். ஒரு ஹைட்ரஜென் (hydrogen) அணுவின் சுற்றளவு 0.000000212 mm ஆகும்.

சரி! இப்பொழுது நாம் அவர் கூற்றுப்படி கணக்கிட்டு பார்போம்.

ஒரு மனிதனின் அல்லது மாட்டின் முடியானது 30 - 80 மைக்ரோன் (micron) அளவாக உள்ளது, எனவே நாம் 50 மைக்ரோன் என்றே வைத்துக்கொள்வோம்.

மயிரின் சுற்றளவு = 50 மைக்ரோன்

100 மைக்ரோன் = 0.1 மில்லிமீட்டர்
(100 micron = 0.1 millimeter).

50 மைக்ரோன் = 0.05 மில்லிமீட்டர்.

இப்பொழுது அவர் கூறியவாறு, ஒரு முடியை நூறாகப் பிரிப்போம்.

0.05/100 = 0.0005 மில்லிமீட்டர்

அதில் ஒன்றை ஆயிரத்தில் வகுப்போம்.

0.0005/1000 = 0.0000005 மில்லிமீட்டர்

இப்பொழுது, நமக்குக் கிடைத்த விடையை, நாம் நான்காயிரத்தில் வகுத்தால்தான் சீவனின் உண்மையான உருவத்தின் அளவை காணலாம் என்கிறார் திருமூலர்.

0.0000005/4000 = 0.000000000125 மில்லிமீட்டர்.

அகவே, அவர் சீவனின் அளவாக குறிப்பிடுவது சரியாக 0.000000000125 மில்லிமீட்டர் (MM) ஆகும்.

இப்பொழுது, அந்த "**சிவம்**" என்று கருதப்படும் சீவனின் அளவானது நம் அறிவியல் ஆய்வாளர்களால் அளக்கப்பட்ட ஹைட்ரஜென் (hydrogen) அணுவை விட பன்மடங்கு சிறியதாக உள்ளது.

சரி! அதை விட சிறியதாக என்ன இருக்கமுடியும் என்கிறீர்களா ...?

அதுதான் **ஹிக்ஸ் போசான்** என்ற பெயரில் இன்றைய அறிவியல் ஆய்வாளர்கள் ஆராய்ந்துக் கொண்டிருக்கும் "**கடவுள் துகள்**" ஆகும்.

நாம் நம் நடைமுறை பேச்சு வழக்கில் பொதுவாக சொல்லும்போது, **"அவனின்றி ஒரு அணுவும் அசையாது!"** என்போம்.

இப்பொழுது புரிகிறதா?...

ஹிக்ஸ் போசானில் கூறும், '**கடவுள் துகள்**' என்ற அணு தனியாக செயல்படவில்லை

அதற்கு ஆதாரமான மூல அணு ஒன்று உள்ளது. அதுதான் காட்ஸ் பார்ட்டிகள் (God's particle) என்னும் போசோன் கண்டுபிடிப்பு.

அதன் அளவு இன்னும் அறியப்படவில்லை...!!! ?

இந்த சீவனின் அளவை சொன்ன திருமூலர், சீவனுக்கு ஆதாரமான சிவனின் உருவத்தை சொல்லாமல் இருந்திருப்பாரா !...?

அதையும் பார்க்கலாம்...!

அவ்வளவு சிறிய சீவனாகிய சிவனின் உருவம் எப்படி இருக்கும்?...! என்று நமக்குள் ஒரு ஆர்வம் உண்டாகிறது அல்லவா?

இதோ அ(சி)வனின் உருவ அழகை சொல்லும் திருமூலரின் திருமந்திரம்.


கரந்துங்கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்
பரந்த சடையான் பசும்பொன் நிறத்தான்
அருந்தவர்க் கல்லால் அனுகலுமாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதி யானே.

இதில், கூறியிருப்பது என்னவெனில், அனைத்திலும் கலந்தும், கலக்காமல் சீவ சாட்சி மாத்திரமாய் இருப்பவன், கண்ணுக்குப் புலப்படாதவன். பரந்த சடையுடையவன். பசும் பொன் நிறத்தில் இருப்பவன். அருந்தவம் செய்கின்றவர்களுக்கு அல்லாமல், மற்றவர்களுக்கு அகப்படாதவன். அதாவது, சும்மா மனதில் நினைப்பவர்க்கெல்லாம் கிடைக்காதவன், அத்துடன் அனைவராலும் தொழப்படுகின்ற வெண்மதி போன்றவன்.

இதில் கூறப்பட்ட அந்த வரிகளின் ஆழமான பொருளை அவசியம் புரிந்துக் கொள்ள முயல்வோம்!.

பொதுவாக, "**சிவம்**" என்றால், '**சடாமுடி உடையவன்**'. சடையன் என்று கூறுவோம்.

அதைத்தான் இந்த பாடலில் அவரும் பரந்த சடையுடையவன் என்கிறார். இப்பொழுது உங்கள் கண்கள் முன்னே ஒரு மனிதனை பரந்த சிகையுடன் சடாமுடி உடையவனாக கற்பனை செய்துக் கொள்ளுங்கள், பின்பு அந்த உருவம் பொன் நிறத்தில் உள்ளது போன்று நினைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது, உங்கள் கண் முன்னே கற்பனையில், அந்த சிவபெருமான் பொன்னிறத்தில், சடாமுடியுடன் காட்சியளிப்பான்.



இப்பொழுது திருமூலர் கூறியவாறு அந்த உருவத்தை கண்ணுக்குப் புலப்படாத அளவில் மிகச் சிறியதாக மாற்றுங்கள். அதாவது, அணுவை விட மிகச் சிறுயதாக மாற்றினால், நிச்சயமாக நம் சாதாரணக் கண்களுக்கு புலப்படாதவன். அவ்வாறே அவன் ஒளிப்பொருந்திய அறிவுப் பிரகாசம் ஆனவன்.

இப்பொழுது சொல்லுங்கள்!...

ஹிக்ஸ் போசோன் சொல்லும் அந்த கடவுள் துகள் எப்படி இருக்கும்?...

ஆகவே, **அணுவுக்குள் அணுவானவனை, உங்கள் உயிருக்கு உயிரானவனை (சீவனை) சிவம் என்று அறிவதில் ஏன் தயக்கம்?....** அத்துடன், அணுக்கூட்டங்களின் தொகுப்பாகிய இந்த உடலை ஆளுகின்ற அந்த அறிவை, ஆன்மாவை, உயிரைப்பற்றி உரைக்கும் உன்னத வேத வாக்கியத்தை

உணர்வதில் என்ன உறக்கம்?. ஆகவே, "**அதுவாகவே நான் இருக்கிறேன்**" என்று கூறுவதில் என்ன மயக்கம்!...?

ஆகவே, உன்னுடைய உணர்வாகிய உயிரே சிவம்...! என்று அனுபவமாக உன்னால் உணர்ந்துக்கொள்ளலாமே தவிர, அதை ஆலயங்களில் தேடி அலைவதினால், அனுபவமாக்க முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே'

ஆகவே, அதை உன் உள்ளத்தில், உணர்ந்துக் கொள்ள வேண்டி, உனக்கு கொடுக்கப்பட்டுள்ள மகத்தான மனித உடலைக் கொண்டு, அதில் உள்ள கள்ளப் புலன்களின் வசம் கட்டுண்டு விடாமல், அந்த புலன்களாகிய கோபுர வாசலின் வாயிலாக அனைத்தையும் அறியக்கூடிய அறிவாகிய அந்த சிவத்தைக் கண்டு, அதன் அறிவுப் பிரகாசத்தை உன் உள்ளத்தில் உணர்ந்து, அந்த "**சீவனே சிவம்**" என உன்னுடைய உண்மை சொரூபத்தைக் கொண்டு, அந்த ஒன்றேயான உன் சொரூபமே அனைத்து உடல்களிலும் உயிராக உள்ளது என்று உணர்ந்து, அனைத்து உயிர்களுக்கும் தீங்கு செய்யாமல் வாழ்வதே மனித உடல் பெற்றதின் மகத்தான பலன் ஆகும்.

உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு. (அதிகாரம்: தவம் குறள் எண்: 261)

அதாவது, உற்ற நோய் என்பது, ஒவ்வொருவருக்கும் உண்டாகியிருக்கும் இந்த உடலே ஒரு தீராத '**நோய்**' ஆகும். அந்த அற்ப உடலைக் கொண்டே, நான் இந்த உடலல்ல என்று அறிந்து, அந்த உடலைக் கடந்த உயிரை உணர்ந்து, அந்த உயிர் ஒன்றே உள்ளதனைத்திற்கும் ஆதாரம் என்பதை ஏற்று, அதுவே மற்ற எல்லா உடல்களிலும் உள்ளது என்பதினால், எந்த உயிர்க்கும் துன்பம் செய்யாமல் வாழ்வதே உண்மையான "**தவம்**" என்கிறார் நம் வள்ளுவப் பெருந்தகை.


உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்புனுக் குள்ளே உறு பொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்தோம்புகின்றேனே.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு உயிரிடை நட்பு அறியாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின்றாரே. (- திருமந்திரம்).

@@@@@ நிறைவு @@@@@

கடவுள் துகள்!



சுவாமி பிரபஞ்சநாதன்